செ.வெ.எண்: 72 நாள்:24.08.2016

## பத்திரிகைச் செய்தி

மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும், திருச்சிராப்பள்ளி ஜோசப் கண் மருத்துவமனையும் இணைந்து 27.08.2016 சனிக்கிழமை அன்று புதுக்கோட்டை இராணியார் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கண் மற்றும் மாறுகண் சிகிச்சைக்கான மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் காலை 09.00 மணி முதல் மாலை 02.00 மணி வரை நடைபெறவுள்ளது. இம்முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து இலவச பரிந்துரை அட்டைகளை மக்களுக்கு வழங்க உள்ளார். எனவே புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த அனைத்து பொது மக்களும் இந்த இலவச கண் சிகிச்சை முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**